சூரிய காந்தி

SOORIYA GANDHI

விலை ரூபா 5-00

மலர் 1 ஞாயிற்றுக்கிழமை 15 - 2 - 1998 இதழ் 14

விநோவின் தரம்
என்றும் நிரந்தரம்

புதிய சிங்கப்பூர் டிசைன் நகைகள்
22 கரட் நகைகள் பெற
நம்பிக்கையான இடம்

விநோ நகைப் பூங்கா

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# ஜனாதிபதி பதவி நீக்கப்படும்

# சட்டமா அதிபரின் அறிவிப்பு!

## ஜனாதிபதி பிரதமர் ஆவார்

உத்தேச யாப்பின் இடைக்கால ஏற்பாட்டுக்கமைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப் படுமென சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய ஆயிரத்து தொழாயிரத்து தொண்ணூற்று நான்காம் ஆண்டின் போது ஜனாதிபதி வகித்த பிரதமர் பதவிக்கு அவர் மீண்டும் நியமிக்கப் படுவார்.

இந்தத் திட்டத்தின் மூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜ்னாதிபதி முறை நீக்கப்படும். எனினும் உடனடியாக ஜனாதிபதி தனது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டிய நிலை ஏற்படாது.

அரசியல் யாப்பு அங்கீகரிக்கப்பட்டால் தேர்தல்கள் நடத்தப்பட்ட பின்னர் புதிய

(4ஆம்பக்கம் பார்க்க)

## குருநகரில் மோதல் ஏழுபடையினர் காயம்

குருநகர் பகுதியில் கடந்த வியாழன் இரவு 10-30 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஏழு படையினர் காயம் அடைந்ததாக 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் இப் பகுதியை நோக்கி பலத்த எறிகணைத்தாக்குதலை மேற்கொண்டனர்என்றும் இதனை அடுத்து ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை என்றும் அவ் வானொலி மேலும் தெரிவிக்கின்றது.

## தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற ஜனாதிபதி ஆட்சி ஒழிப்பு அறிவிப்பு

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையிலே உத்தேச அரசியல் யாப்பு திட்டத்தை ஜனாதிபதி நிறைவேற்ற முற்பட்டுள்ளளார் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை அகற்றப்படும் தறுவாயில் பாராளுமன்றத்திற்கே கூடிய அதிகாரம் வழங்கப்படுகின்றது எனினும் இவ்அரசியல் யாப்பு திட்டம் எப்போது இருந்து அமுல்படுத்துவது இதற்குஎவ்வளவுகால எல்லை முடியும் என்பதைக் கூட சட்ட மா அதிபர் தெரிவிக்கவில்லை.

எனவே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறைஇன்னும்இரண்டு வருடமாவது நீடிக்கக்கூடிய

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஏற்பு தடை ஊசி வந்தபோதும் தொடர்ந்து கட்டுப்பாட்டுடன் ஊசி மருந்து ஏற்றப்படும்

யாழ். போதனா வைத்திய சாலைக்கு முதல்காலாண்டுக்கு தேவையான ஏற்பு தடை ஊசி மருந்தில் ஐந்நூறு ஊசி மருந்து மட்டுமே வந்துள்ளதாக யாழ் போதனா வைத்திய சாலை உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

எனவே இவ் தடுப்பு ஏற்புஊசியை மருத்துவமனையில் தங்கி நின்று சிகிச்சை பெறுபவர்களுக்கு மட்டும் ஏற்றுவதற்கு தாம் முடிவு செய்துள்ள தாகவும் வெளிநோயாளர் பிரிற்கு ஏற்பு தடைஊசி ஏற்றப் படமாட்டாது எனஅவ் அதிகாரி தொடர்ந்து தெரிவித்தார்.

## கோயம் புத்தூரில் குண்டு வெடிப்பு இருபத்தாறு பொது மக்கள் பலி!

தமிழ் நாட்டின் கோயம்புத்தூரில் நேற்று பரவலாக இடம் பெற்ற குண்டு வெடிப்புகளில் ஒரு பெண் உட்பட இருபத்தாறு பொதுமக்கள் கொல்லப்பட்டனர். குறைந்தது முப்பது பேர் படுகாயமடைந்தனர்.

இந்தியப் பொதுத் தேர்தலின் பிரச்சாரத்தின் கடைசி நாளான நேற்று கோயம்புத்தூரில் பாரதிய ஜனதாக் கட்சியின் பிரச்சாரக் கூட்டம் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டிருந்தது இக் கூட்டத்தில் அக் கட்சியின் தலைவர் எல். கே. அத்வானி பேசுவதாகவும் இருந்தது இவ்விடத்திற்கு அருகில்தான் குண்டுவெடிப்பு இடம் பெற்றுள்ளது.

இக் குண்டு வெடிப்புக்கு யார் காரணமென இது வரை இனங் காணப்படவில்லையாயினும் இந்து மதவாதக் கட்சியான பாரதிய ஜனதாவுக்கெதிராக குண்டு வெடிப்புகளில் இஸ்லாமியப் பாதுகாப்புப் படை ஈடுபட்டு வந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது

## அடம்பனில் மூவர் காயம்

(வவுனியா)

வவுனியா அடம்பன் குளத்தில் நேற்று முன் தினம்ஏற்பட்ட மோதலை தொடர்ந்து ஒரு பெண் உட்பட மூன்று பேர் படுகாயம் அடைந்து மல்லாவி வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

அடம்பன் குளத்தில் நடைபெற்ற துப்பாக்கி சூட்டினாலே இவர்கள் படுகாயம் அடைந்துள்ளனர்.

முத்துச்சாமி (54) வயது சண்முகதேவன் (14) வயது ராஜேஸ்வரி (19) வயது ஆகியோரே காயமடைந்தவர்கள்.

## குண்டு வெடிப்பில் வெளிநாட்டு சதி? தமிழ்நாட்டு முதலமைச்சர் கேள்வி

கோயம்புத்தூரில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பிற்கும் வெளிநாடுகளுக்கும் இடையில் தொடர்புகள் இருக்கலாம் என தமிழ்நாடு முதலமைச்சர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் சமாதானத்தை குழப்ப வெளிநாடுகளினால் மேற்கொள்ளப்பட்ட சதித்திட்டமாக இக் குண்டு வெடிப்பு இருக்கலாமெனவும் முதலமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூரின் முக்கியமான பன்னிரண்டு இடங்களில் இடம்பெற்ற இக்குண்டு வெடிப்புத் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் அதே வேளை தமிழ் நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்த மத்திய அரசு பாதுகாப்புப் படைகளை தமிழ் நாட்டிற்கு அனுப்பி வைக்கவுள்ளது.

## கிழக்குப் பிராந்திய கடலில் புலிகளுடன் கடும் மோதல்

இலங்கையில் கிழக்கு கடற் பிராந்தியத்தில் கடலில் நடைபெற்ற இருமோதல் களில் இருபதிற்கும் மேற்பட்ட புலிகள் பலியானதாக இலங்கை கடற் படையினர் தெரிவித்துள்ளனர்

கிழக்கு பகுதியில் "இருந்து வடக்கு நோக்கி புலிகளை ஏற்றி இறக்கும் பணியில் இருந்த படகுகள் மீது தாக்குதல்நடத்திய தாகவும்இதில் ஒரு படகை தாம் நிர்மூலமாக்கியதாகவும், மேலும் நான்கு படகுகள் சேதம் அடைந்துள்ளதாகவும் கடற் படையின் சார்பில் கருத்து தெரிவிக்கும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் "பிஸ்டல்" குழுவினர் மலையகத்துள் ஊடுருவல்

வடக்குக் கிழக்குப்பகுதியில் தங்களுக்கு எதிரானவர்களைக் கொலை செய்வதில் ஈடுபட்டிருந்த குழுவினர் மலை நாட்டிற்குள் ஊடுருவியுள்ளதாகப் பாதுகாப்புத் துறையினருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

மலை நாட்டில் இவர்களின் இலக்காக உள்ளவர்களைக் கொலைசெய்வது இவர்களின் நோக்கமாக இருக்கிறது எனத் தெரியவருகிறது.

மலையகத்தில் ஊடுருவியுள்ள இவர்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படியும், சந்தேகத்திற்கிடமான இடங்கள், நபர்கள்பற்றிப் பொலிஸாருக்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி மலையக மக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

மலை நாட்டில் தொழில் புரியும் அரச நிறுவனங்களிலுள்ள அதிகாரிகள், ஆசிரியர்கள் ஊடாக, அங்கு வாழும் பாடசாலை மாணவ, மாணவிகள் இளைஞர், யுவகள் போன்றோரைத் தமது இயக்கத்தில் சேர்த்துக்கொள்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்வதாக பாதுகாப்புத் துறையினர் செய்தி வெளியிட்டுள்ளனர்.

மலைநாட்டில் தொழில் புரியும் அதிகாரிகள், ஆசிரியர்கள் அனேகமானோரின் உறவினர்கள் வடபகுதியைச் சேர்ந்தவர்களென்றும் இவர்களின் ஆதரவுடனேயே புலிகள் இலகுவாகத் தமது செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

மலைநாட்டில் இருந்து கிழக்கிற்கும், கிழக்கில் இருந்து மலைநாட்டிற்கும் பிரசித்திபெற்ற நிறுவனங்களின் வாகனங்கள் போக்குவரத்தை மேற்கொள்கின்றன. இவ்வாகனங்களைப் பயன்படுத்தி புலிகள் வெடிமருந்துகள் குண்டுகள் போன்றவற்றைக் கடத்துகின்றனர்.

இதற்காக அந்த நிறுவனங்களுக்கு வெளிநாட்டில் வேலை செயயும் புலிகளுக்கு ஆதரவானவர்களினால் அனுப்பப்படும் பெருமளவு பணம் வழங்கப்படுகின்றன என்று பாதுகாப்புத் துறையினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

# சம்பள உயர்வு வழங்க இணக்கம் தொழிலாளர் வேலைக்குத் திரும்பினர்

## 9 நாள் போராட்டத்திற்கு முடிவு

தோட்டத்தொழிலாளருக்கு 101 ரூபா சம்பள உயர்வு வழங்க தொழில் கொள்வேர் சம்மேளனம் முடிவு செய்துள்ளனர். தொழிலாளர்கள் இதனை அடுத்து 9 நாட்களாக நடை பெற்று வந்த போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

தொழிலாளர்கள் நேற்று முதல் வேலைக்குத்திரும்பியுள்ளனர். சம்பள உயர்வு பிரச்சனையை ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க நேரடியாகத் தலையிட்டு தீர்த்து வைத்தார்.

ஜனாதிபதி தலமையில் கூடிய பேச்சுவார்த்தையில், தொழிற் சங்கங்களும், தோட்ட முதலாளிமார் சம்மேளனமும், பொதுச்சங்கங்களும் கலந்து கொண்டன. இப் பேச்சுவர்த்தையில் ஏற்பட்ட இணக்கத்தை அடுத்தே தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்.

இவ் உடன்படிக்கையில் 95 ரூபா அடிப்படைச் சம்பளம் வழங்கவும், 6 ரூபா தேயிலை போணஸும் வழங்க தோட்ட முதலாளிமார் இணங்கி உள்ளனர். இதேபோல றப்பர் தொழிலாளருக்கும் 95 ரூபா அடிப்படைச் சம்பளம் வழங்கப்படும். றப்பரின் விலை உயர்விற்கேற்ப ஒவ்வொரு ரூபாவிற்கும் 30 சதம் அவர்களுக்கு மேலதிகமாக வழங்கப்படும்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இப்பேச்சு வார்த்தையில் அமைச்சர் எஸ். தொண்டமான், தொழில் அமைச்சர் ஜோன் செனிவிரட்ணா, தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர் ராஜா செனிவிரட்ண, பெருந் தோட்ட கட்டமைப்பின் தலைவர் மானியகொட உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

இறுதியாக, புதிய சம்பளத் திட்டங்கள் அமுல்படுத்துவது வேலை நிறுத்தத்தை வாபஸ் பெறுவது ஆகிய ஒப்பந்தங்கள் ஜனாதிபதி முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டன.

# வளைகுடா பற்றிய ரஷ்யாவின் நிலை வேறு அர்த்தத்தை பிரதி பலிக்கிறது.

## அமெரிக்கா குற்றச்சாட்டு

உயிரியல் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தக் கூடிய சாதனங்களை ஈராக்கிற்கு ரஷ்யா விற்பனை செய்வதற்கான 95ஆம் ஆண்டுக்கான உடன் படிக்கைப் பத்திரங்கள் ஈராக்கில் ஐ. நா. ஆயுத பரிசோதகர்களால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

ஈராக் இந்த சாதனங்களைப் பெற்றுக் கொண்டதா என்பதுபற்றி தெரியாத அதே வேளையில் இந்த ஒப்பந்தம் ரஷ்யாவிற்கும் ஈராக்கிற்கும் இடையில் தீர்வு காணப்படாத ஒரு ஒத்துழைப்பாகக் கருதப்படுகின்றது என்று 'வோஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை தெரிவித்திருக்கின்றது.

இந்த ஒப்பந்தம் அமெரிக்க அதிகாரிகள் மத்தியில் கவலையை ஏற்படுத்துகின்றது என்றும் ரஷ்யா அண்மையில் ஈராக்கிற்கும் ஐ. நா. சபைக்கும் இடையிலான சர்ச்சைக்கு இராஜதந்திர ரீதியிலான தீர்வு காண்பதற்கு எடுத்துக் கொண்ட முயற்சி வேறு அர்த்தத்தை எடுத்துக் காட்டுகின்றது என்றும் அப்பத்திரிகை தெரிவித்திருக்கின்றது.

95 ஆம் வருட ஒப்பந்தம் தொடர்பாக ஐ. நா. சபை ஆறு வாரங்களிற்கு முன்னர் ரஷ்யாவிடம் விபரங்கள் கோரிய போதிலும் ரஷ்யா அதற்குப் பதிலளிக்கவில்லை. ஈராக்கிற்கு அபாயகரமான ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்கான மூலப் பொருட்களை விற்பனை செய்யக் கூடாது என்று ஐ. நா. சபை விதித்திருக்கும் தடையை மீறுவதா இந்த ஒப்பந்தம் அமைந்திருக்கிறது என்று நம்பப்படுகின்றது.

ஈராக் ஆயுதப்பரிசோதனை விவகாரம்தொடர்பாக எழுந்திருக்கும் சச்சரவை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கத்துடன் யோசனைகளை முன்வைத்திருக்கின்றது. ஆனால் அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்டன் இந்த யோசனைகளை உடனடியாகவே நிராகரித்து விட்டார். ஆயுதப் பரிசோதனை நடவடிக்கை தொடர்பாக அமெரிக்காவின் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஈராக் தவறி விட்டதாக அவர் தெரிவித்தார்.

ஈராக்கிய பிரதிப் பிரதம மந்திரி ''தாரிக் அஸீஸ்'' கருத்து வெளியிடும்போது ஜனாதிபதி மாளிகைகள் அமைந்திருக்கும் பகுதிகளில் பரிசோதனை நடத்துவது தொடர்பாகத் தமது நாடு விட்டுக்கொடுக்கும் போக்கை பின்பற்றுவதாக வலியுறுத்தி இருக்கின்றார்.

பிரிட்டனும் அமெரிக்காவும் இந்தப் பிரச்சனைக்கு ராஜதந்திர ரீதியில் தீர்வு காணப்படுவதை விரும்பவில்லை என்று ஈராக்கிய பிரதிப் பிரதமமந்திரி குற்றம் சாட்டினார்.

ஆனால் எந்தவிதக் கட்டுப்பாடும் இன்றி ஐ. நா. ஆயுதப் பரிசோதனை குழுவினர்க்கு ஈராக் இடமளிக்காவிட்டால் இராணுவ நடவடிக்கையில் இறங்குவதற்கு அமெரிக்கா உறுதிபூண்டுள்ளது என்று அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்டன் வலியுறுத்தி இருக்கின்றார்.

இன்னும் ஒரு வாரத்தினுள் அல்லது அதற்கும் ஒருசில நாட்களின் பின்னர் ரரணுவ நடவடிக்கையில் ஈடுபடுவதற்குத் தமது துருப்பினர் தயாராக இருப்பதாக வளைகுடாவில் உள்ள அமெரிக்கப் படைகளின் தளபதி தெரிவித்து இருக்கின்றார்.

ஜனாதிபதி கிளின்டன் வோஷிங்டனில் வெளிநாட்டுத் திணைக்கள அலுவலகத்தில் கருத்து வெளியிடும் போது பேரழிவை உண்டு பண்ணும் ஆயுதங்கள் வைக்கப்பட்டுள்ளன எனச் சந்தேகிக்கப்படும் சகல இடங்களிலும் சுதந்திரமாகச் சென்று சோதனை நடத்துவதற்கு ஐ. நா. குழுவினருக்கு ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசெய்ன் அனுமதிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

பலாத்காரம் பிரயோகிக்கப் படுவதை தவிர்க்க முடியுமென்று நாம் அனைவரும் நம்புகின்றோம். ஆனால் அது ஜனாதிபதி சதாம் ஹுசெய்னின் கைகளில் தான் உள்ளது என்றும் பில்கிளின்டன் தெரிவித்து இருக்கின்றார்.

# 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி 'தினத்தந்தி' ஆதித்தன் 'குமுதம்' அண்ணாமலை சாதனை செய்த பத்திரிகையாளர்!

-சுகுமாரன்-

(நேற்றைய தொடர்ச்சி)

எழுதியதை சுவையாகவும்' தர்க்க ரீதியாகவும், வாசகர்களின் உள்ளத்தைத் தொடக் கூடிய முறையிலும் 'கல்கி' எழுதினார். எழுத்தில் நகைச்சுவை நிறைய இருந்தது.

அவர் எழுத்து சிரிக்கவும் வைத்தது, சிந்திக்கவும் வைத்தது.

'விகட'னுக்கு வருமுன்னர் தமிழறிஞர் திரு. வி. க.வின் 'நவசக்தி' பத்திரிகையிலும் கல்கி உதவி ஆசிரியராக வேலை செய்திருந்தார்.

திரு. வி. க.விடம் பெற்ற பயிற்சி கல்கியின் தமிழறிவு வளரவும் பண்படவும் உதவியது.

சமூகப் பிரக்ஞையுடன் தனது எழுத்தை ஒரு பிரச்சார சாதனமாகவே தான் கல்கி எப்போதுமே பயன்படுத்தினார்.

**'ஆனந்தவிகடன்'பதவியை ராஜினாமா செய்தார்!**

'ஆனந்த விகட'னில் இருந்தபோது கல்கிக்கு ஒரு பிரச்சினை வந்தது.

இந்திய சுதந்திரப்போராட்டத்தில் அப்போது 'தனி நபர் சத்தியாக்கிரகம்' நடைபெற்று வந்தது.

காந்திஜியினால் தெரிவு செய்யப்பட்டவர்கள் தான் இதில் பங்குபற்றலாம்.

கல்கியும் இதில் பங்குபற்ற விரும்பினார்.

காந்திஜியும் இவரைத் தெரிவு செய்தார்.

'ஆனந்த விகடன்' அதிபர் வாசனுக்கு இது பிடிக்கவில்லை.

கருத்து வேறுபாடு வந்தது.

'வேலையா, சுதந்திரப் போராட்டமா?' என்றகேள்வி எழுந்தது.

'பட்'டென்று தனதுவேலையை ராஜினாமா செய்துவிட்டு வெளியே வந்துவிட்டார் கல்கி!

அதன் பின்னர்தான், தமது புனைபெயரையே பத்திரிகையின் பெயராகச் சூட்டி 'கல்கி' பத்திரிகையை சதாசிவத்துடன் சேர்ந்து தொடங்கினார்.

லட்சியத்தைப் பெரிதாக மதித்து ராஜினாமா செய்தது மக்களிடையே அவரது மதிப்பை உயர்த்தியது!

அவர் தொடங்கிய 'கல்கி' அவருடைய எழுத்துக்காகவே விற்பனையானது!

அப்படி ஒரு மோகம் தமிழ் வாசகர்களுக்கு அவர் எழுத்துக்களில்!

வர்த்தக ரீதியில் பணம் பண்ணுவதற்காக 'கல்கி'யை அவர் நடத்தவில்லை. இப்படிப் போட்டால் அதிகம் விற்பனையாகும்' என்பதற்காக எந்த விசயத்தையும் அவர் பிரசுரிக்கவில்லை.

காந்திஜியின் கருத்துக்களைப் பரப்புவதற்காகவும், ராஜாஜிக்கு ஆதரவு செய்வதற்காகவும்மே தான் அவர் 'கல்கி'யை தொடங்கினார்.

அவரிடம் ஒரு கொள்கைத் தெளிவு இருந்தது., உறுதி இருந்தது!

'என்னால் முடியும்' என்ற தன்னம்பிக்கை இருந்தது.

இதைத்தான் செய்வது என்று நினைத்தார். அதையே தான் செய்தார்!

**தொடர் கதைகளுக்காக பத்திரிகை வாங்கினார்கள்**

'கல்கி'யில் அவர் நிறைய தொடர் கதைகளை எழுதினார், 'பார்த்தீபன் கனவு' சிவகாமியின்சபதம் 'பொன்னியின் செல்வன், என்பன தமிழ் நாட்டின் பெருமைக்குரிய வரலாற்றை அற்புதமான முறையில் எடுத்துக் காட்டின.

'அலை ஓசை' அமரதாரா போன்ற தொடர்கதைகள் சமூகப் பிரச்சினைகளையும் சுதந்திரப் போராட்டத்தையும் படம்பிடித்துக் காட்டின.

இந்தத் தொடர்கதைகளைப் படிப்பதற்காகவே பத்திரிகை வாங்கிய வாசகர்கள் பலர்!

தொடர்கதைகளைப் படிப்பதற்காக பரந்துபட்ட பல்லாயிரக் கணக்கான வாசகர் கூட்டத்தை உருவாக்கிய முதல் தமிழ் எழுத்தாளர் கல்கி தான்!

**SATIRE என்னும் நகைச்சுவை கேலி நடை**

அரசியல் கட்டுரைகள், சிறுகதைகள், தொடர்கதைகள், விமரிசனங்கள், பிரயாணக் கட்டுரைகள் என்று பல்வேறு விஷயங்களை கல்கி எழுதினார்.

**Satire** என்னும் நகைச்சுவை கேலி நடையை அவர் கையாண்டது போல் யாரும் கையாண்டதில்லை.

வாசகர் தொகை வாரம் தோறும் அதிகரித்துக் கொண்டே வந்தது.

தமிழ்நாட்டில் அதிகம் விற்பனையாகும் வார இதழாக 'கல்கி' தலை நிமிர்ந்தது.

கல்கி எதை எழுதினாலும் எல்லாருக்கும் புரியக்கூடிய முறையில் எழுதினார். கனமான விஷயங்களை சரளமாகவும், எளிமையாகவும் எழுதினார்,

ஒவ்வொரு வசனத்திலும் அவரது தனிமுத்திரை தெரிந்தது.

**தன்னை ஒளித்துக்கொண்ட எஸ். ஏ. பி**

கல்கியின் ஆளுமை அவரது பத்திரிகையில் 'பளிச்' சென்று தெரிந்தது.

இது தான் அவரது பத்திரிகையின் வெற்றிக்குக் காரணமாகவும் இருந்தது!

இதற்கு நேர்மாறானது 'குமுதம்'!

'பத்திரிகைச் சிறுகதைகள்' என்று ஒரு ரகம் தமிழில் உருவாவதற்கு 'ஆனந்த விகட'னும் 'கல்கி'யும் தான் காரணம்!

'குமுதம்' இன்னும் ஒரு படி மேலே சென்றது.

'குமுத'மான கதைகளை உருவாக்கியது.

வர்ணனைகளிலும், சம்பாஷனைகளிலும், கதைக்கான படங்களிலும் 'இனக்கவர்ச்சி' அடிநாதமாக இழைந்து ஓடியது 'குமுதம்' கதைகளில்!

**போதை ஊட்டின மறைமுகமாக**

சாதாரணமாக ஒரு மனிதன் ஏதாவது ஒன்றுக்கு பழக்கத்தின் காரணமாக அடிமை ஆகிவிட்டால், என்ன நடக்கும்?

பீடி குடிப்பவன் பீடி குடிக்காமல் இருக்க முடியாது.

சொக்கலால் பீடி என்ன மாதிரி தமிழ் நாட்டில் விற்பனை ஆயிற்றோ அதே மாதிரித்தான் 'குமுதம்' கதைகளும் விலை போயின!

ஒரு விதமான போதை ஊட்டி... இரண்டு 'தம்' அடித்ததும் தூக்கி வீசி விடலாம்...!

ஆனால் பலருக்கு அந்த இரண்டு 'தம்' தேவையாக இருந்ததுதான் விசேஷம்!

( தொடரும் )

# சூரியகாந்தி

## பயமுறுத்தப்படும் பத்திரிகையாளர்

பத்திரிகையாளர் இக்பால் அத்தாஸ் கொலை மிரட்டலுக்கு ஆளாகியிருக்கிறார்.

அவருடைய எழுத்துக்களை ஜீரணிக்க முடியாத சிலர் அவரையே தின்று தீர்த்துவிடப் பார்க்கிறார்கள்.

நமது ஜனநாயக வளர்ச்சிக்கு இது அப்படி ஒன்றும் நல்ல சகுனம் அல்ல!

முன்னர் ரிச்சாட் டிசொய்சா வின் எழுத்துக்களைப் பொறுத்துக் கொள்ள முடியாத சிலர் அவரையே தூக்கிச் சென்று சாகடித்தார்கள்.

நல்ல எழுத்தாளர்கள் நக்கீரனின் வாரிசுகள். நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமேதான் என்பவர்கள்.

எழுத்தாளர்கள் எல்லாருமே ஏதோ கடவுளின் இயல்பும் பத்தினித் தன்மையும் உடையவர்கள் அல்ல.

ஏதோ ஒரு வகையில் விலைக்கு வாங்கக் கூடிய எழுத்தாளர்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள்.

அதே நேரத்தில் -

எந்த விலை கொடுத்தும் வாங்க முடியாத எழுத்தாளர்களும் இருக்கவே செய்கிறார்கள்.

இவர்கள் ''மாதம் மும்மாரி''க்கு காரணம் ஆனவர்கள்.

தற்கால உலகத்தில் பத்திரிகையாளர்களின் பணிமாறு தலடைந்து கொண்டு வருகிறது.

செய்திகளை முந்தித் தருவதில் ரேடியோவும் 'ரிவி'யும் பத்திரிகைகளை விட எவ்வளவோ தூரம் முன்னேறிவிட்டன.

வெறுமனே நடந்ததை நடந்தபடி சொல்வதோடு நிறுத்திக் கொண்டால் பத்திரிகை இபல்பான ஒரு சாவைத் தழுவுவதைத் தவிர வேறு வழி இல்லை!

'செய்தித் தொடர்பு ஊடகம்' என்ற உலகத்தில் தொடர்ந்தும் ஒரு வலுவான சக்தியாக இருக்கவேண்டுமானால் பத்திரிகைகள் தங்களது நடைமுறைகளையும் செயற்பாட்டுக் களத்தையும் சற்று வித்தியாசப்படுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றன.

இங்கே தான் -

'இன்வெஸ்ரி கேரிங் ஜேர்னலிஸம்' என்று சொல்லுகின்ற - செய்திகளை மோப்பம் பிடித்து துருவித் துருவித் தேடிச் செல்லுகின்ற - செய்திக்குப் பின்னால் உள்ள செய்திகளை கண்டு வெளியிடுகின்ற - அணுகு முறையை பத்திரிகையாளர்கள் கடைப்பிடிக்க வேண்டி இருக்கிறது!

பாதுகாப்புப் படையினரின் செயற்பாடுகளை தேடி தேடி துருவித் துருவி ஆராய்ந்து செய்திகளை சொல்லிக் கொண்டு இருந்த இக்பால் அத்தாஸிக்கு வாசகர் மத்தியிலே நல்ல வரவேற்பு இருந்தது.

அத்தாஸ் செய்திகளை தேடி எடுத்துத் தந்தாரே தவிர, உற்பத்தி செய்து தரவில்லை.

இக்பால் அத்தாஸுக்கு தெரியுமோ தெரியாதோ அவருடைய வாசகர்களுக்கு ஒரு விஷயம் நன்றாகவே தெரிந்திருந்தது.

'இவர் மாட்டுப்படப் போகிறார் என்றுதான் எல்லாருமே எதிர்பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

நினைத்தது மாதிரியே நடந்திருக்கிறது.

ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்துள்ள எவருமே இக்பால் அத்தாஸ் மீது கொண்டுவரப்பட்ட கொலை மிரட்டலை மிகச் சாதாரணமான ஒன்றாகக் கருதி ஒதுக்கிவிட முடியாது.

'நீதி' யை நம்புகின்ற எவரும் இத்தகைய அக்கிரமங்கள் மெலிதாக முளைவிட்டு மெல்ல வார்ந்து சமுதாயம் முழுவதையுமே சர்வநாசம் செய்யும் சக்திகளாக உருப்பெறுவதை விரும்பமாட்டார்கள்.

# பிரிகேடியருடன் தீவக அதிபர்கள்
# நிறைவான மனம் திறந்த சந்திப்பு

தீவகப் பாடசாலைகளின் அதிபர்கள் வேலணை 514 வது படையணியைச் சேர்ந்த பிரிகேடியர் விஜயசுந்தரவுடன் சிவில் நிர்வாக காரியாலயத்தில் 13-2-98ல் அவசரமாகக் கூட்டப்பட்ட கலந்துரையாடலில் பின்வரும் கருத்துப் பரிமாறல்களும் தீர்மானங்களும் எடுக்கப்பட்டன:

**தாமதமாக வந்த பிரிகேடியர்**

குறிக்கப்பட்ட நேரத்தை தாண்டி தாமதமாக வருகை தந்த பிரிகேடியர் -

தனக்குரித்தான கனவான் தனத்தில் அதிபர்களிடம் தான் பிந்தி வந்ததிற்கு முதலில் மன்னிப்பளிக்கும்படி கேட்டுக்கொண்டார். நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலை திறம்பட நடாத்தி முடித்ததிற்கு பங்களிப்பை நல்கிய தீவக மக்களுக்கும் மற்றும் ஆசிரியர்கள், அதிபர்களுக்கும் நன்றி கூறினார். உறவுக்கு கைகொடுப்போம் உங்கள் குறைபாடுகளுக்கு நான் செவிமடுத்து என்னாலான உதவிகளை நிச்சய நல்குவேன் என்ற பீடிகையுடன் தனது கருத்துக்களை கூறத் தொடங்கினார். மிகவும் இலகுவான ஆங்கிலத்தில் சரளமாக உரையாடியமையினால் மொழிபெயர்ப்பு தவிர்க்கப்பட்டது.

**கலாச்சார நிகழ்வுகள்**

கடந்த பல ஆண்டுகளாக யுத்தத்தினால் சீரழிக்கப்பட்ட கல்வியை கட்டியெழுப்ப அதிபர்களாகிய நீங்கள் முன்வர வேண்டும். உளப் பாதிப்படைந்திருக்கும் பிள்ளைகளுக்கு நாடகம் மற்றும் தமிழ் மக்களின் கலை கலாச்சார வடிவங்களை பாடசலை மட்டத்தில் ஏற்படுத்தி அவற்றை மேடையேற்ற உங்கள் மத்தியிலே ஒரு கலாச்சாரக் குழு ஒன்றினை உடனடியாக ஏற்படுத்தி செயற்படுத்த வேண்டும் என்றார். மேலும் சிறப்பான கலைப்படைப்புக்களை கொழும்பில் மேடையேற்றவும், ஒளிபரப்பவும் நிச்சயம் உதவி செய்வதுடன் சிறந்தனவற்றைத் தெரிவு செய்ய அரசாங்க அதிபர் மற்றும் கல்விப்பணிப்பாளர்கள் மட்டத்தில் செயற்குழு அமைக்கவிருக்கின்றேன் யாழ்ப்பாணத்தில் நடக்கும் கலாசாரநிகழ்ச்சிகளை கண்டுகளிக்க தீவக மாணவர்கள் விரும்பும் பட்சத்தில் இலவசமாக பிரயாண வசதிகள் செய்துதரப்படுமெனவும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் இப்பிள்ளைகளின் இழந்த கல்வியை ஈடுசெய்யதுரிதமாக செயற்பட வேண்டுமெனவும் அதற்கான உபகரணங்கள் அன்பளிப்புச் செய்வதாகவும் கூறியதுடன் விளையாட்டுப் போட்டிகள், பரிசில் நாள் மற்றும் மாணவர்களை உற்சாகப்படுத்தும், ஊக்கமூட்டும் நிகழ்வுகளையும் முன்னெடுத்துச் செல்லும்படியும் வேண்டிக் கொண்டார்.

**போக்குவரத்து**

தீவகப் பாடசாலைகள் கல்வி முன்னேற்றத்தில் தொடர்ந்தும் பின்தங்கிக் காணப்படுவதற்கு போக்குவரத்தும் தலையாய காரணமென பல அதிபர்கள் பிரிகேடியரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். யாழ்ப்பாணத்தையே பெரும்பாலான ஆசிரியர்களும் அதிபர்களும் தற்போது வாழிடமாகக் கொண்டிருப்பதனால் உரிய நேரத்திற்குச் சென்று கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட இராணுவத்தினர் பண்ணை, அல்லைப்பிட்டி, மண்கும்பான், மற்றும் துறையூரில் அமைந்துள்ள சோதனைச் சாவடிகள் கால விரயமாக்குகின்றன. மற்றும் ஊர்காவற்றுறைக்குச் செல்லும் 777 பேருந்துச் சேவை ஒழுங்காக நடைபெறுவதில்லையென்றும் 780 - பஸ் சேவையானது வேலணை துறையூர் வரை சென்று பின் அராலிச்சந்திக்கு வந்து யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறைக்குச் செல்வதால் நேரம் விரயமாகின்றது.

**புங்குடுதீவு பிரயாணம்**

புங்குடுதீவு செல்லும் ஆசிரியர்கள் வேலணைத்துறையில் நீண்ட நேரம் சோதனைச் சாவடியில் மறிக்கப்பட்டும் குறிகட்டுவான் செல்லும் அதிக பிரயாணிகளின் எக்கச்சக்கமான மூட்டை முடிச்சுகளை சோதனை செய்யஎடுக்கும் நேரத்தினாலும் உரிய நேரத்தில் கற்பித்தல் கடமைகளைச் செய்ய முடியாது இருக்கின்றனர். பிற்பகலில் நடைபெறும் போக்குவரத்தும் ஒழுங்கற்று காணப்படுவதினால் இவற்றைச் சீராக்கித் தருமாறு பிரிகேடியரைக் கேட்ட பொழுது அனுதாபத்துடன் இக்கோரிக்கையை உள்வாங்கி அவர் நிச்சயம் போக்குவரத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளை உடன் போக்கி உங்கள் மனத்துயரங்களை அகற்றுவேன் என உறுதி கூறினார்.

**இரத்தினராசாவுக்கு பாராட்டு**

இலவச சீருடையை கூடிய கெதியில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளேன். உங்கள் கல்வி வலயப்பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா அவர்கள் தீவக பிள்ளைகளின் கல்விப்பணிக்கு ஆற்றிவரும் பங்களிப்பினை நான் பாராட்டுகின்ற அதேவேளை அதிபர்களாகிய நீங்களும் உங்கள் மேல் சுமத்தப்பட்டிருக்கும் பாரிய பொறுப்பினையும் மறக்கக்கூடாது.

**வேலணை மத்திய மகாவித்தியாலயம்**

வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்தை விட்டு இராணுவம் பிற இடத்திற்குச் செல்லும் நோக்கம் தற்போதில்லையென்றும் தொடர்ந்தும் மேற்படி பாடசாலையில் தான் தரித்து நிற்குமெனவும் குறிப்பிட்ட பிரிகேடியர், ஆயிரம் மாணவர் தொகையையும் 33 ஆசிரியர் வளங்களையும் நீங்கள் இப்பாடசாலைக்கென திரட்டித் தரின் நிச்சயம் மீண்டும் இப்பாடசாலை கையளிக்கப்படுமெனச் சுட்டிக்காட்டினார்.

தீவகப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர்கள் பற்றாக்குறையும் ஆராயப்பட்டது. பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்க ஆசிரியர்கள் தயாராக இல்லாதபடியினால், பணிபுரிய மறுப்பதுடன், பின்னடிப்பதும், எப்பாடுபட்டேனும் மாற்றம் எடுக்கவும் தெண்டித்து வருகின்றனர்.

**தொண்டர் ஆசிரியர்கள்**

இத்தகைய சூழ்நிலையில் தீவகப் பாடசாலைகளில் தொண்டராகப் பணிபுரிய விரும்பும் ஆசிரியர்கள் ஒரு வருட காலம் சேவைபுரியின் அவர்கள் ஆசிரிய நியமனம் பெற கல்வியமைச்சுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்யப்படும் எனவும், தான் பணிபுரிந்த பிற மாவட்டங்களில் இப்படிப்பட்ட தொண்டர் ஆசிரிய நியமனங்களை அரச ஆசிரியர்களாக நியமிக்க பங்களிப்புச் செய்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

**இயக்கமோதல் வேண்டாம்**

அண்மையில் நடந்த இயக்கமோதல்களைப் பற்றி தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டார். பல்வேறு பிரச்சனைகளின் மத்தியில் வாழ்வா, சாவா என்று வாழ்ந்து கொண்டிருக்கும் உங்கள் மத்தியில் மீண்டும் அமைதிக்குப் பங்கம் விளைவிக்க எடுக்கப்படும் இத்தகைய செயல்கள் நிகழா வண்ணம் முன்கூட்டியே நடவடிக்கைகள் உறுதியாக எடுக்கப்படும் என்றார்.

**''லாம்பு''டன் வாருங்கள்**

ஊரடங்குச் சட்டத்தை மதிக்கும்படியும் வினயமாகக் கேட்டுக் கொண்டார். இதை மதிக்காத பட்சத்தில் தான் அனாவசியமாக உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன. நோய் மற்றும் அவசர காரியங்களாக இரவுவேளையில் வெளியே வர விரும்பினால் ''லாம்பின்'' துணையுடன் வெளிவரலாமென்றார்.

பாடசாலைகளின் அபிவிருத்திக்கு பலகோடி ரூபாய்கள் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதால் அரசு, தனியார், மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் மூலம் பண உதவி பெற்றுத்தர, உங்கள் பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ள புனர

**வி. ஆ. சிவராசா**

மைப்பு சம்மந்தமான வேலைகளைத் தனக்கு உடனடியாக அறிவிக்குமாறு வேண்டிக் கொண்டார்.

**சுருவில் மாணிக்கம்**

தனது இளமைக்காலத்தில் பாடசாலை விடுமுறையைக் கழிப்பதற்கு ஊர்காவற்துறை சுருவிலைச் சேர்ந்த வர்த்தகர் திரு மாணிக்கம் என்பவரின் வீட்டுக்கு வந்து சென்றதாகவும், தமிழ் மக்களைத் தனது உடன்பிறவாச் சகோதரர்களாகக் கருதி நடப்பதாகவும், பல கால கட்டங்களில் தீவகத்தில் கடமை புரிந்திருப்பதாய் குறிப்பிட்ட அவர், கடந்த காலத்தில் இரு இனங்களுக்குமிடையே நடந்த கசப்பான அனுபவங்களை மறந்து சிதைந்து போயுள்ள சிங்கள- தமிழ் உறவுகளைக் கட்டியெழுப்ப அதிபர்களாகிய நீங்கள முன்வர வேண்டுமெனக் கூறி, பிள்ளைளுக்கு 'பிதா' போன்று நீங்களும் பாடசாலைகளில் துலங்க வேண்டுமெனக் கூறியவாறு நன்றி தெரிவித்து கருத்தரங்கினை நிறைவு செய்தார்.

# தோட்ட தொழிலாளர் வேலை நிறுத்தம் இன்றும் தொடர்கின்றது முடிவில்லை

## எஸ். சந்திரசேகரன்

தோட்ட தொழிலாளகள் சம்பள பிரச்சினை நேற்று முன்தினம் முடிவடைந்ததாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான சொ, தொண்டமான் தெரிவித்த போதும் இன்னும் இப்பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட வில்லை என பிரதி அமைச்சரும் மலைய ஐக்கிய முண்னணி தலைவர் எஸ்.சந்திர சேகரன் தெரிவித்துள்ளார்

தோட்ட தொழிலாளர் இன்றும் கூட வேலைக்குத் திரும்ப வில்லை. அவர்களை பொறுத்த மட்டில் ஒரு ரூபா மட்டுமே சம்பள உயர்வு வழங்கப் பட்டுள்ளது. இதற்காக தொழிலாளர் ஒன்பது நாட்கள் வேலல நிறுத்தத் தேவையில்லை. எனவே தோட்ட தொழிலாளர் இன்று இலங்கை தொழிலாளர் காங்ரஸ் மீது வெறுப்பு அடைந்து காணப்படுகின்றனர் என தெரிவித்தார்.

மலை நாட்டில் அமைச்சர் தொண்ட மானுக்கு எதிராக தோட்டங்களின் ஊர்வலம் நடை பெற்று வருவதாகவும் தோட்ட தொழிலாளர் தம்மை தொண்டமான் காட்டி கொடுத்ததாக வெளிப்படையாக தெரிவித்துள்ளதாக பிந்திக் கிடைத்த செய்தியில் தெரிவித்துள்ளார்.

## தோட்ட வேலை நிறுத்தம் அரசுக்கு 1125கோடி நட்டம்

நடை பெற்றுக் கொண்டு இருக்கும் தோட்ட தொழிலாளர் வேலை நிறுத்தத்தினால் இது வரை 1125 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

யுத்த செலவு நீண்டு இருக்கும் சமயத்தில் இந் நட்டம் இலங்கை பொருளாதாரத்தை பெரிய அளவு பாதிப்பதுடன் எதிர்காலத்தில் திறை சேரி உண்டியல்களின் உதவியுடனே இந் நட்டத்தை அரசாங்கம் ஈடுசெய்ய வேண்டி வரும் என அச்செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

## ஊரடங்கை தளர்த்தக் கோரிக்கை

சிவராத்திரி தினம் எதிர் வரும் 25ம் திகதி வருகிறது. இது இந்துக்களுக்கு ஒரு முக்கியமான தினமாகும். கோயில்களில் அன்றிரவு முழுவதும் ஆறுசாமப் பூஜைகளும் வழிபாடுகளும் பஜனைகளும் இடம்பெறும் எனவே அன்றைய தினத்து இரவு நேர ஊரடங்கை தளர்த்துமாறு யாழ்ப்பாணத்தில் உள்ள இந்துசமயச் சங்கங்களும் ஆலய நிர்வாகங்களும் அரசாங்கத்தைக் கேட்டுள்ளன.

## மீன் பிடிக்கு மறுப்பு சந்தையில் விலை உயர்வு

குருநகர் பகுதி மீன் பிடிக்க அனுமதி அளிக்கப் படவில்லை என குருநகர் மீன்பிடி சங்கத்தினர் தெ்ரிவித்துள்ளனர்.

சென்ற வியாழன் இரவு நடைபெற்ற அசம்பாவிதத்தை தொடர்ந்து இவர்களை வெள்ளி சனி ஆகிய இரு நாட்களும் கடலில் செல்வதற்கு அனுமதி மறுக்கபட்டதாகவும் இன்றும் தொழிலுக்கு செல்தற்கு அனுமதி கிடைக்க போவதில்லை என்றும் தெரிவித்த மேற்படி சங்கத்தின் நாளைக்கு பின்னர் தபன் இறுதி முடிவு கிடைக்கும் என தாம் நம்புவதாக தெரிவித்துள்ளனர்

இதேவெளை கடந்த இரு தினங்களாக'மீன் விலை அதிகமாக காணப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# சுதந்திரக் கட்சியுடன் நெருங்கி வரும் சஜித் பிரேமதாசா குழுவினர்

கொழும்பு அரசியலில் சில புதிய உறவுகள் உருவாகி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதியாக இருந்த பிரேமதாசாவின் மகன் சஜித் பிரேமதாசா இப்போது யூ. என். பி தூண்களுள் ஒருவராக இருந்து வருபவர்

அரசாங்கஅமைச்சர்களான மங்கள சமரவீரா, எஸ். பி. திசாநாயக்கா ஆகிய இருவருடன் இவர் இப்போது நெருக்கமான உறவு ஏற்படுத்திக் கொண்டிருப்பதாக தெரியவருகிறது.

முன்னர் சர்வோதய இயக்கத்தில் இருந்தவரான நவரத்ன என்பவர் இப்போது அமைச்சர் எஸ். பி' திசாநாயக்காவுடன் மிக நெருக்கமாக இருக்கிறார்.

அமைச்சர் எஸ். பி. திசாநாயக்காவுடன் சஜித் பிரேமதாசாவுக்கான உறவை ஏற்படுத்திக் கொடுத்தவர் நவரத்ன என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. முன்னாள் அமைச்சரும் யூ. என். பி அரசியல் வாதியுமான கூரேயின் உறவும் இப்போது சஜித் பிரேமதாசாவுடன் நெருக்கமாகி வருகிறது.

நெருக்கமாகி வரும் சஜித் பிரேமதாசா, மங்கள சமரவீரா, எஸ். பி திசாநாயக்கா ஆகியோரின் உறவு அரசியலில் புதிய புதியமாற்றங்களைக் கொண்டுவரும் என்று அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

அமைச்சர்கள் மங்களசமரவீரா, எஸ்.பி.திசாநாயக்கா ஆகிய இருவரும் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு மிக நெருக்கமானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐ.தே.க காலம்கடத்துகிறது தமிழ் தலைவர் அதிருப்தி

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த நீலன் திருச்செல்வம், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தொண்டமான், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் ஆகியோர் சென்ற வாரத்தில் யூ.என்,பி முக்கிய புள்ளிகளான ரொனி டி மெல் கருணாசேன கொடித்துவக்கு மகிந்த சமரசிங்க ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் இப்பேச்சுவார்த்தைகளில் யூ,என்,பி பிடிகொடாமல் பேசியது தமிழ்க்கட்சிகளின் தலைவர்களுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை என்றும்செய்திகள் தெரிவிக்கின்றன.

யூ,என்,பியின் இனப்பிரச்சினை தொடர்பான மாற்றுத் திட்டம் மத்தியில் அதிகாரப்பகிர்வு பற்றிக் கூறுகிறதே தவிர, அதிகாரப்பரவலாக்கல் பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை என்று தமிழ்த் தலைவர்கள் குறைப்பட்டுக் கொண்டதாகவும் தெரியவருகிறது.

தங்களுடைய மாற்றுத் திட்டத்தின் ஒருபகுதிதான் தற்போது வெளியிடப்பட்டிருப்பதாகவும், அடுத்துவர இருக்கும் பகுதியில் மற்றைய விபரங்கள் வெளியிடப்படும் என்றும் யூ,என்,பி தலைவர்கள் தெரிவித்ததாகவும் இந்தப்பதில்யூ,என்,பியின் காலம் கடத்தும் நடவடிக்கை என தமிழ்த்தலைவர்கள் கருதியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சந்திப்பின் போது ''நாங்கள் நீண்டநாள் காத்திருக்கமுடியாது'' என்று நீலன் திருச்செல்வம் கூறியதற்கு ''நாங்கள் அவசரப்படமுடியாது'' என்று யூ, என்,பி தலைவர்கள் கூறினார்களாம்.

# யாழ் நூலகத்திற்கு தமிழக அரசு ஒரு வருட சஞ்சிகைகள் அன்பளிப்பு

யாழ்ப்பாண பொது நூலகத்திற்கு தொடர்ந்து ஒரு வருடத்திற்கு தமிழ் ஆங்கில சஞ்சிகைகளை அன்பளிப்பாக தமிழகஅரசு வழங்கவுள்ளது.

இச்சஞ்சிகைகள் யாவும் தமிழகத்தில் வெளிவருபவையாகவே இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் பொது நூலகத்தை புனரமைப்பு செய்வதில் இலங்கை அரசு காட்டிவரும் தீவிரத்தை அடுத்தே தமிழக அரசு இந்த உதவியை வழங்குகிறது.

சமீபத்தில் ஒரு தொகுதி சஞ்சிகைகளை இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் வழங்கியது இவற்றை யாழ் அரச அதிபர் யாழ் மாநகர சபை ஆணையாளரிடம் கையளித்திருந்தார்.

இதே சமயம் தென்னிலங்கையில் உள்ள பொது நிறுவனங்களும் வெண் தாமரை இயக்கமும் கணிசமான நூல்களை யாழ் நூலகத்தில் அன்பளிப்புச் செய்துள்ளன.

யாழ்ப்பாணப் பொது நூலகம் கண்டி வீதியில் உள்ள வீடமைப்பு திணைக்கள கட்டிடத்திலும் அதன் கிளைகள் நல்லூர், நாச்சிமார் கோவிலடி, குருநகர் ஆகிய பகுதிகளில் இயங்கி வருகின்றன. இந்த நூலகங்களில் சுமார் 57 ஆயிரம் நூல்கள் இருப்பதாக யாழ்ப்பாண பொது நூலகர் தெரிவுத்துள்ளார்.

## கலை விழா

இருபாலை கிழக்கு பாரதி கலாமன்ற சனசமூகநிலையத்தினால்நடாத்தப்படும் பாலர் வகுப்பினரின் கலைநிகழ்ச்சியென்று இன்று பி.பகல் 2மணிக்குபாரதிகலாமன்றசன சமூகநிலையத்தில் நடைபெற இருக்கிறது இந்த நிகழ்ச்சியின் போதுபாலர் வகுப்பினரின் கலை, ஏடன நிகழ்ச்சிகளும்நடைபெற விருக்கின்றன.

## ராணுவ நடவடிக்கையினால் பலத்தநட்டம் ஏற்பட்டுள்ளது

தெல்லிப்பழை பல,நோ கூ சங்கத்திற்கு கடந்த கால இராணுவ நடவடிக்கையால் 409 இலட்சத்து 21 ஆயிரத்து 82 ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

1992 ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் திகதி தெல்லிப்பழையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையினால் முதலில் மானிப்பாயில் தனியார் கட்டிடத்தில் இச்சங்கம் இயங்கியது.

தெல்லிப்பழையில் இருந்து மானிப்பாய்க்கு இடம் பெயரும் போது பெறுமதியான பொருட்களைக் கைவிட்டுவிட்டே செல்ல வேண்டி ஏற்பட்டதாக இச்சங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

1995 அக்டோபரின் பின் தென்மராட்சிக்கு இடம் பெயர்ந்து மீண்டும் துர்க்காபுரத்தில் தற்காலிகமாக இயங்குகிறது. இதன் நட்டஈடுகோரி ஜனதிபதி புனர்வாழ்வு அமைச்சு மற்றும் அதிகாரிகளுக்கு மகஜர்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இதுவரையும் எதுவித நட்டஈடும் வழங்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

## எஸ் . ஜே . வி நூற்றாண்டுவிழா

தமிழ்தேசியஇனத்தின்தந்தை மூதறிஞர்எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களின் நூற்றாண்டு விழா யாழ்ப்பாணத்தில்விரிவானமுறையில்நடாத்துவதற்கு ''புளொட்'' அமைப்பு ஏற்பாடுகளைமேற்கொண்டுள்ளதாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பு தெரிவிக்கிறது.

## ஹேமா அரசியலுக்கு வர ரணில் விக்கிரமசிங்கா தடை

யூ. என். பியின் தொகுதி அமைப்பாளர் பதவி குடும்பத்திற்கு ஒருவருக்குத் தான் கொடுக்க முடியும் என்று யூ. என்.பி தலைவர் ரனில் விக்கிரமசிங்காகடுமையாகக்கடைப்பிடிக்கும் கட்சி விதிமுறை முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மனைவி ஹேமா பிரேமதாசாவின் தீவிர அரசியல் பிரவேசத்திற்கு தடையாக இருக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் மகன் சஜித் பிரேமதாசா அம்பாந்தோட்டை தொகுதிக்கு யூ. என்.பி அமைப்பாளராக இருக்கிறார்.

இதனை காரணம் காட்டி கொழும்பு மத்திய தொகுதியின் அமைப்பாளராக வர விரும்பும் ஹேமா பிரேமதாசாவின் ஆசைக்கு யூ.என் பி தலைமைப்பீடம் தடை போடுகிறது

இதன் காரணமாக ஹேமா பிரேமதாசவின் ஆதரவாளர் யு என் பி தலைவரானரணில் விக்கிரமசிங்கா மீது பலமான அதிருப்தி கொண்டிருப்பதாக தெரியவருகிறது.

## ஜனாதிபதி

மாகாண சபைகள் அமைக்கப்படுமாயின் அவை பிராந்திய சபைகளின் ஒன்றியமாக மாற்றப் படுவது நேரடியாக இடம் பெறும் எனவும், சட்டமா அதிபர் தெரிவித்தார்.

உத்தேச அரசியல் யாப்பு உயர் நீதிமன்றம், மேன் நீதி மன்ற நீதியரசர்கள் தொடர்ந்தும் அதே பதவியில் இருப்பதற்கு இடமளிக்கின்றன.

## தேர்தல்

வாய்ப்பு இருப்பதாகவும் அடுத்த பாராளுமன்ற தேர்தலுடன்அனேக மாகமாற்றப்படும் எனவும்அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## கிழக்குப்...

அதிகாரி தெரிவித் துள்ளார்.

இதேவேளை இத்த க்குதல் குறித்து புலிகளின் குரல் வானொலி எந்தகருத்தையும் தெரி விக்கவில்லை.

## அகதிகள் இடமாற்றம்

வவுனியா கோழிக்கூடு தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழர்கள் பூந்தோட்ட முகாமிற்கு இட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

''சூரிய காந்தி'' நிறுவனத்துக்காக அவர்களது அச்சகத்தில் 1998ம் ஆண்டு பிப்ரவரி 15ம் தேதி 68/1, ராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. ஆசிரியர்: கு. குமாரசாமி.